செய்தி வெளியீடு எண் :04, நாள் :04.06.2018

***தேனி மாவட்டம்***
***4-வது தேசிய கைத்தறி தினத்தினை முன்னிட்டு***
***கைத்தறி இரகங்களை காட்சிப்படுத்துதல் மற்றும் சிறப்பு விற்பனை முகாமினை***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்***
***குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.***

******

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், 4-வது தேசிய கைத்தறி தினத்தினை முன்னிட்டு, கைத்தறி மற்றும் துணி நூல் துறையின் சார்பில், கைத்தறி இரகங்களை காட்சிப்படுத்துதல் மற்றும் சிறப்பு விற்பனை முகாமினை இன்று (04.06.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், தமிழக அரசு கைத்தறி நெசவாளர்களின் வாழ்வை மேம்படுத்திட தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்கும் திட்டம், பசுமை வீடுகள் திட்டம், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்கும் திட்டம், ஆயுள் காப்பீட்டு திட்டம், கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம், நெசவாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம், மாநில அளவில் சிறந்த நெசவாளர் விருது வழங்கும் திட்டம், திறன்மிகு கைத்தறி நெசவாளர்களுக்கு பரிசுகள் வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தமிழக அரசு தேசிய கைத்தறி தினத்தினை சிறப்பாக கொண்டாடும் வகையில் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மூலம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில், அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பொது மக்களிடையே கைத்தறி துணிகளின் சிறப்பினை கொண்டு செல்லும் வகையில் கைத்தறி கண்காட்சி 04.06.2018, 05.06.2018 மற்றும் 06.06.2018 ஆகிய மூன்று தினங்கள் கைத்தறி இரகங்களை காட்சிப்படுத்துதல் மற்றும் சிறப்பு விற்பனை முகாம் நடத்தப்படவுள்ளது.

கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் கீழ் மதுரை சரகத்தை உள்ளடக்கிய மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் 39 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில் 1817 நெசவாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். தேசிய கைத்தறி தினத்தை முன்னிட்டு மதுரை சரகத்திற்கு, கைத்தறி துணி விற்பனை ரூ.35.00 இலட்சம் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இக்கண்காட்சியில், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறி இரகங்களான மதுரை சுங்குடி சேலைகள், கோடம்பாக்கம் சேலைகள், கோரா சில்க் சேலைகள், காட்டன் சேலைகள், செடிபுட்டா சேலைகள், ஈரோடு மற்றும் கரூர் போர்வைகள், மெத்தை விரிப்பு, தலையனை உரைகள், கைலிகள் பெட்ஷீட், துண்டு இரகங்களும் 20 சதவீத தள்ளுபடி விற்பனையில் விற்பனை செய்யப்படவுள்ளது. எனவே, நமது மாவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இம்முகாமில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.கந்தசாமி அவர்கள், கைத்தறி மற்றும் துணி நூல் துறை (மதுரை) உதவி இயக்குநர் திரு.சையது தாவூத் அவர்கள், துணிநூல் கழக ஆய்வாளர் திரு.வெங்கடேஷ் அவர்கள், கைத்தறி ஆய்வாளர் திரு.ரமேஷ் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**